# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 310 / 2023

| Deposition of Witness for | Prosecution PW1<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Sivaranjani |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 23rd day of March, 2026.

( Accused present )

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நேரம் 12.15 மணி

நான் தற்போது மெதூரில் வசித்து வருகிறேன். நான் இருளர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் பெயர் பன்னீர்செல்வம். என் அண்ணன் கார்த்திக் பழவேற்காட்டில் மீன் பிடிக்கும் வேலை செய்து வருகிறார். 23/04/2021 அப்போது கொரானா காலகட்டம். எங்கள் வீட்டில் கழிவறை வசதி கிடையாது.

நான் இயற்கை உபாதையை கழிப்பதற்கு Forest office அருகில் புட்புதருக்கு செல்வோம். 23/04/2021 அன்று மாலை 3.00 மணிக்கு அப்போது நான் இயற்கதை உபாதையை கழிக்க சென்றபோது பழவேற்காடு உள்தோப்பு கழிவுநீரும் கடலும் ஒன்றாக சேருமிடம் முட்புதரில் என்னை முடியை பிடித்து என் தலையில் அடித்து என் வாயில் குத்தி என்னிடம் நைட்டியை கிழித்து என்னிடம் தவறாக நடந்து கொண்டார். என் துணியை கிழித்து என் மீது ஏறி உட்கார்ந்து என்னை கற்பழித்தார். என் பிராவை, ஜட்டி, நைட்டியை கிழித்து கழட்டி எறிந்துவிட்டார். என் தொடையில் நகக்கீரல்கள் இருந்தது. என்னை கற்பழித்தார். நான் கத்தியவுடன் என் கழுத்தில் குத்தினார். நீ இருளர் சாதி பெண் என்று கூறி என்னை மறுபடியும் அடித்தார். என்னை கழிவுநீர் பாண்டில் சேற்றில் போட்டு தள்ளி காலால் என்னை அழுத்தினார். பின்னர் என்னை முட்புதரில் தூக்கி என்னை அடித்தார். பின்னர் என் காலை பிடித்து தர தர வென்று இழுத்து முட்புதரில் போட்டுவிட்டார். நான் செத்துவிட்டேன் என்று நினைத்து என்னை முட்புதரில் போட்டுவிட்டார். என் முதுகு, தொடை, கால் எல்லாம் முள்காயம் ஆகிவிட்டது. என் காதிலிருந்து கம்பல், என் முக்கீல் இருந்த மூக்குத்தியை எடுத்து சென்றுவிட்டார். நினைவு தெரிந்தவுடன் அருகிலிருந்த குப்பை தொட்டியில் இருந்த ஸ்கூல் யுனிபார்ம்–ஐ போட்டு என் உடம்பை மறைத்துக் கொண்டு அருகிலிருந்த படகுனிள் படுத்துக்கொண்டேன். அந்த ஊரைச்சேர்ந்த ஜெய்சங்கர் என்ற அண்ணன் வந்தார். அவரிடம் என் தங்கையிடம் கூப்பிடுமாறு கூறினேன். ஜெய்சங்கர் என் சித்தி பெண் அங்கம்மாவை யாரோ ஒரு பெண் படகில் விழுந்துகிடக்கிறார் என்று கூறி ஊர்காரர்களை அழைத்துக்கொண்டு வந்தார். என்னை பழவேற்காடு மருத்துவமனையில் அங்கம்மாவும், ஜெய்சங்கரும் சேர்த்தார்கள். பின்னர் போலீசார் என்னை விசாரித்தார்கள். ஜெய்சங்கர் அண்ணனிடம் எனக்கு நடந்த விவரத்தை கூறினேன். மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என் கையொப்பமாகும். புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இதுசம்பந்தமாக பொன்னேரி நீதிமன்றத்தில் விசாரணை செய்தார்கள் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் 164 குவிமுச வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் ஆகும். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் நைட்டி, பிரா, ஜட்டி, உள்பாவாடை ஆகியவை என்னுடையது தான். சிவப்பு நிறம் கொண்ட சேறுடன் கூடிய கிழிந்த நிலையில் உள்ள நைட்டி–1 **அ.சா.பொ.1** ஆகவும், இளஞ்சிவப்பு நிற கிழிந்த நிலையில் உள்ள பிரா–1 **அ.சா.பொ.2** ஆகவும், பச்சை நிறம் கொண்ட சேறுடன் கூடிய கிழிந்த நிலையில் உள்ள உள்பாவாடை–1 **அ.சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.